# 5. சாதியப் பாகுபாடு

# 5. சாதியப் பாகுபாடு

**பாட நோக்கம்**

- சாதி, மனிதர்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாகுபடுத்துவதால் சமத்துவத்தை மறுப்பது.
- சாதி உருவாக்கியுள்ள தீண்டாமை மனித மாண்பை கேலி செய்வது.
- சாதியின் உள்ளடக்கம் மனிதத்தை மறுப்பது, எனவே மனித உரிமைகளை மீறுவது என்பதனை மாணவர்க்கு எடுத்துரைத்தல்.



1. **மனிதரிடமிருந்து பாகுபடுத்துதல் அல்லது பாகுபடுத்த தூண்டுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு.** *– அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 7*

2. **மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே பாகுபாடு காட்டுதல் கூடாது.** *– பிரிவு 15*

3. **மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் அனுமதிக்கவும், இடங்களைப் பயன்படுத்தவும் நிபந்தனைகளோ, கட்டுப்பாடோ விதிக்கக் கூடாது.**

   **அ. கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவகம், பொழுது போக்கிடங்கள்.**

   **ஆ. கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள்** *– பிரிவு 15(3)*

4. **தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையின் அனைத்து வடிவங்களும் செயற்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

   **தீண்டாமையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக எழும் எவ்வகைச் செயற்பாடும் தண்டனைக்குரியது.** *– இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 17*

## ஆசிரியர் நடவடிக்கை

1. பாகுபாட்டிற்கு எதிரான ஐ.நா.வின. உடன்படிக்கையை மாணவர்க்குப் படித்துக் காட்டி விளக்குக.
2. தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதென்று 1950–ல் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சாசனம் கூறுவதால் மாணவர்களிடம் தீண்டாமை ஒழிந்து விட்டதா என்ற கேள்வியைக் கேட்கவும்.
3. தீண்டாமை பற்றிய சரியான புரிதல் இல்லையெனில் மாணவர்க்கு ஆசிரியர் தன் அனுபவம் மூலம் தீண்டாமை பற்றி விளக்கம் தரவும்.
4. மாணவர்கள் தீண்டாமை பற்றி தெரிந்த பின், மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். மாணவர்கள்

   *அ. தம் வீடுகளில் (மேல் சாதி வீடாக இருந்தால்)*
   *ஆ. ஊரில்*
   *இ. கோயிலில்*
   *ஈ. பள்ளியில்*
   *உ. பொதுவிடங்களில்*
   *ஊ. குளம், கிணறு*
   *எ. உணவகம்* *முதலிய இடங்களிலும்*

அ. இவை போன்ற ஏனைய இடங்களிலும் எல்லோரும் சாதி வித்தியாசமின்றி அனுமதிக்கப் படுகின்றனரா?

ஆ. இம்மாதிரி இடங்களில் எத்தகைய தீண்டாமை வடிவங்கள் கடைபிடிக்கப்படுகின்றன? எடுத்துக்காட்டாக,



- *இரட்டை டம்ளர் முறை*
- *செருப்பணியத் தடை*
- *வாக்களிக்க தடை*
- *பொதுக்குளத்தைப் பயன்படுத்த தடை*
- *கோயில் வழிபாடு செய்ய தடை முதலியன.*

மாணவர்கள் தொகுத்த இவ்வடிவங்களை வகுப்பில் பகிர்ந்து கொள்ளச் சொல்லுக. மாணவர்கள் தீண்டாமை வடிவங்களைப் பகிர்ந்து கொண்ட பின் கீழே கொடுக்கப் பட்டிருக்கும்

- *ஒவ்வொரு நிகழ்வையும், ஒரு மாணவன் அல்லது மாணவியை வாசிக்கச் சொல்லுக*

**(அல்லது)**

- *வகுப்பு மாணவர்களைக் குழுவாகப் பிரித்துக் கீழ்க்கண்ட தீண்டாமையின் வடிவங்களை வாசிக்கச் செய்து, வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.*

## வடிவம் 1

## கற்பிக்கப் பெறும் தீண்டாமை



ஒரிசா மாநிலத்தில் பள்ளிகளில் மதிய உணவின் போது தலித் குழந்தைகள் ஒரு வரிசையிலும், தலித் அல்லாத குழந்தைகள் வேறொரு வரிசையிலும் தனித்தனியாக உட்கார்ந்து சாப்பிடு கின்றனர். மதிய உணவின் போது அங்கு சென்ற பத்திரிகையாளர்களிடம் பிரிதிவி என்ற மாணவி கூறும் போது, "நாங்கள் தலித் என்பதால் இங்கு உட்கார்ந்து சாப்பிடுகிறோம். நாங்கள் அந்தப் பக்கம் சென்றால் இங்கிருந்து ஓடி விடு என்று கூறுவார்கள். அவர்களின் தண்ணீர்க் குவளையைத் தொட்டால்கூட, தட்டிலிருக்கும் உணவைக் கீழே கொட்டி விடுவார்கள். இதன் காரணமாகவே நாங்கள் தனிவரிசையில் உட்கார்ந்து சாப்பிடுகிறோம்" என்றாள்.

***- சாய்நாத், தி இந்து 21.01.2001***

**வடிவம் 2**

## பாகுபடுத்தும் டம்ளர்



கரூர் மாவட்டத்தில் ஒரு கிராமம். இங்கு அடிப்படை வசதி மறுக்கப்பட்ட 80 தலித் குடும்பங்கள் வாழ்கின்றன. தீண்டாமையின் உச்சமாக டீக்கடையில் தலித்துகளுக்கும், மேல் சாதியினருக்கும் **தனித்தனி டம்ளர்கள்!** தலித்துகள் டீக்கடையின் உள்ளே செல்லக் கூடாதாம். வெளியே நின்று தான் டீ வாங்க வேண்டும். பெஞ்சில் உட்காரக் கூடாது;. பஸ் ஸ்டாண்டிலும் பெஞ்சில் உட்காரக் கூடாது. **- மக்கள் களம், ஜூன் 2002**



**வடிவம் 3**

## சைக்கிளில் செல்லக் கூடாதாம்!

காஞ்சிபுரம் மாவட்டம் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் மேல் சாதியினர் வசிக்கும் தெருக்களின் வழியாக நடந்து செல்லக் கூடாது. சைக்கிள் ஓட்டிச் செல்லக் கூடாது. நல்ல பேண்ட், சட்டை அணிந்து செல்லக் கூடாது.

**– மக்கள் களம், ஆகஸ்ட் 2002**

### காவல்துறையில் பதிவு செய்யப்பட்ட வன்கொடுமை வழக்குகள்

| ஆண்டு | புகார் செய்யப்பட்டது | வழக்குகள் பதியப்பட்டது | நிலுவையில் உள்ள வழக்குகள் | விசாரணையில் உள்ளது | தண்டிக்கப்பட்டது | விடுவிக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|
| 1998 | 897 | 391 | 265 | 7 | 21 | 213 |
| 1999 | 1,011 | 379 | 384 | 9 | 20 | 219 |
| 2000 | 996 | 279 | 516 | 33 | 3 | 165 |
| 2001 | 500 | 164 | 187 | 149 | --- | --- |

*- நன்றி : தீக்கதிர் 08.11.2002*